
# அண்ணலாரின் அற்புத ஹிஜ்ரத்



அல்ஹாஜ் மௌலவி ஏ. எல். முஹாஜிரீன் (நத்வி) காதிரி



بسم الله الرحمن الرحيم

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! ஸலவாத்தெனும் கருணையும், ஸலாம் எனும் சாந்தியும் எங்கள் நாயகம் ஷபீவுல் முத்னிபீன் ரஹ்மதுன் லில் ஆலமீன் ஸெய்யிதினா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பேரிலும் அன்னாரின் குடும்பத்தினர், தோழர்மார், தொடர்ந்தவர்கள் மீதிலும் இன்னும் இறை நேசர்கள், நாதாக்கள், நல்லவர்கள் மீதிலும் என்றென்றும் உண்டாவதாக.

அன்புள்ள முஸ்லிம் சகோதரர்களே!

இஸ்லாமிய வரலாற்றில் எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் ஹிஜ்ரத் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அவர்களின் ஹிஜ்ரத்தின் போது பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார்கள்.

எனவே அவ்வரலாற்றைப் பல கிரந்தங்களிலிருந்து தெரிந்தெடுத்து சுருக்கமாக எழுதியுள்ளேன். அத்துடன் பாவலர்களான முன்னைய அறிஞர்ப் பெருமக்கள் ஆத்ம ஞானிகளினால் நாயகம் ஸல்லல்லாஹு அவர்களின் பேரில் புகழாகப் பாடப்பட்ட கசீததுல் வித்ரிய்யா, புர்தா, ஹம்ஸியா. வித்ரிய்யாவின் த.்.மீஸ் போன்ற மாலைகளிலிருந்து ஹிஜ்ரத்தோடு சம்பந்தப்பட்ட பாடல்களையும் அதற்குரிய கருத்துக்களையும் கூறியுள்ளேன். அதற்கு "அண்ணலாரின் அற்புத ஹிஜ்ரத்" எனப்பெயர் சூட்டியுள்ளேன்.

எனவே இதைப்பார்வையிடும் சகோதரர்கள் ஏதும் பிழைகளிருப்பின் எமக்கு அறிவித்தால் மறுபதிப்பில் திருத்திக் கொள்வோம் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

இதை எழுதிய எனக்கும், பார்க்கும் சகோதரர்களுக்கும், மற்றும் மு.்.மினான ஆண்கள், பெண்களுக்கும் இறைவன் ஈருலகப் பாக்கியங்களையும் தந்தருள்வானாக ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

இவ்வண்ணம்
இஸ்லாமிய ஊழியன்
அல்ஹாஜ் மௌலவி
ஏ. எல். முஹாஜிரீன் (நத்வி) காதரி
அதிபர் - நுழாருள் காதிரிய்யா அரபிக் கல்லூரி - களுவெள்ளை, காலி.

இல. 159A,
ரைத்தளாவெளை,
உக்குவெளை.
24. 05. 1998
பிறை 27. ஸபர் 1419

**MOULAVI HMM YOOSUF**

**( MUSTHAFI)**

**ERAVUR**

**SRILANKA**

**Swjf786@gmail.com**

**WWW.JMHKALMUNAI.BLOGSPOT.COM**


## அண்ணலாரின் அற்புத ஹிஜ்ரத்

அன்புச் சகோதரர்களே!

எங்களுடைய நாயகம் ஷபீஉல் முத்னிபீன், ரஹ்மதுன்லில் ஆலமீன் செய்யிதினா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை தன்னகத்தே வைத்துக்கொண்டிருக்கும் அல் மதீனத்துல் முனவ்வரா; அதன் பக்கமே ஆரிபீன், ஆஷிகீன்கள், மு∴மினீன்கள் அனைவோரினதும் உள்ளங்கள் சாய்ந்திருக்கின்றன!

மக்கமாநகருக்கு ஹஜ்ஜு செய்யப் போகும் ஹாஜிகள் தமது கடமையை முடித்துக் கொண்டு மதீனாவுக்கு எப்போது செல்வோம் என எதிர்பார்க்கின்றனர். இவ்வத்தனைக்கும் காரணம் எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அங்கிருப்பதும், அம்மதீனாவைப் பற்றி அவர்கள் மேன்படுத்தி கூறியிருப்பதுமே!

“உங்களில் யார் மதீனாவில் மரணிக்கச் சக்தி பெறுகிறாரோ அவர் அங்கு மரணிக்கட்டும். எனவே யார் அங்கு மரணிக்கிறாரோ அவருக்கு நான் மறுமையில் சாட்சியம் சொல்லக்கூடியவனாக இருப்பேன். அல்லது சிபாரிசு செய்யக்கூடியவனாக இருப்பேன்.” என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறியுள்ளார்கள்.

- ஆதாரம் தர்ஹீப் வத்தர்கீப் -

“எனது உம்மத்தில் நின்றும் யாராவதொருவர் மதீனாவில் ஏற்படும் கஷ்டத்தின் பேரிலும் சூட்டின் பேரிலும் பொறுமையாக இருக்கிறாரோ அவருக்கு நான் சாட்சியம் சொல்லக்கூடியவனாக இருப்பேன்” எனக் கூறியுள்ளார்கள்.

- ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி -

இதைக் குறித்து அல்லாமா ஸதகதுல்லாஹில் காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வித்ரிய்யாவின் த∴மீஸில்,

مُحِبٌّ لَهَا كُلُّ الوَرَى بِتَحَرُّمِ
وَمَنْ حَلَّهَا صَبْرًا بِغَيْرِ تَبَرُّمِ
بِلَأْوَائِهَا تَشْفَعْ لَهُ بِتَكَرُّمِ
مَسَاءً وَإِصْبَاحًا بِغَيْرِ تَجَشُّمِ
مَلَائِكَةٌ فِيهَا تَرُوحُ تَحُومُ

படைப்புகள் யாவும் தங்களின் சிறப்பான மதீனாவை சங்கையோடு விரும்புகிறார்கள். யாராகிலுமொருவன் சலிப்பின்றி மதீனாவில் ஏற்படும் கஷ்டத்தினைப் பொருத்துக்கொண்டு அதில் விடுதிவிட்டால் தாங்கள் அவனுக்கு சங்கையுடன் நாயனிடம் சிபாரிசு செய்வீர்கள். ஒவ்வொரு நாளும் ஓயாமல் காலையிலும், மாலையிலும் மலக்குகள் வந்து உங்களைச் சுற்றி நின்று ஸியாரத்து செய்கின்றனர் எனக் கூறியுள்ளார்கள். அதாவது ஒவ்வொரு நாளும் காலையில் எழுபதினாயிரம் மலக்குகள் வந்து மாலைவரையும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் கப்றை சுற்றி நின்று ஸியாரத்துச் செய்கிறார்கள். மாலையாகியதும் இம்மலக்குகள் செல்லப் போகும் நேரம் இன்னும் எழுபதினாயிரம் மலக்குகள் வந்து மறுநாட் காலை வரையும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் கப்றை சுற்றி ஸியாரத் செய்கிறார்கள். இப்படியாகக் கியாமத்து நாள் வரையும் நடைபெறும். மலக்குகள் புதிது புதிதாக வருவர்.

இதைப்பற்றி இன்னுமொரு இடத்தில் ஸதகத்துல்லாஹில் காஹிரி அவர்கள்.

وَرَوْضَةٌ لَمْ يَخْلُ يَوْمًا فِنَاؤُهَا
وَقُبَّةٌ لَمْ يَخْشَ وَقْتًا فَنَاؤُهَا

அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களது சிறப்பான ரௌலாவாகிறது அதன் கோணம் ஒரு நாளாவது மனிதர்களை விட்டோ மலக்குகளை விட்டோ ஓய்வதில்லை மேலும் அவர்களின் குப்பாவாகிறது ஒரு நேரத்திலாவது அழிந்து விடுவதைப் பயப்படுவதில்லை என்பதாகக் கூறியுள்ளார்கள்.

இன்னோரிடத்தில்

إِذَا سَارَ حَبًّا فَاحَ طِيبُ مُحَمَّدٍ
ثَلَاثَةَ أَيَّامٍ كَمِسْكٍ مُفَرَّقٍ
وَلَوْ مَكَّةٌ بَاهَتْ بِكَعْبَةِ سَرْمَدِ
زَهَتْ طَيْبَةٌ مُخْتَالُ فَخْرًا بِأَحْمَدِ
وَكَيْفَ لَا وَفِيهَا قَبْرُهُ مُتَعَطِّرُ



அண்ணலாரின் அற்புத ஹிஜ்ரத்

அதாவது:- முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒரு பாதையில் நடப்பார்களேயானால் அவர்களினின்றுமுண்டான கஸ்தூரி வாடை அப்பாதையில் மூன்று நாட்களுக்கு உதிர்க்கப்பட்ட கஸ்தூரியைப் போன்று மணம் வீசிக்கொண்டிருக்கும்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மதீனாவின் பாதைகளின் ஒரு பாதையால் நடந்து போவார்களேயானால் அப்பாதையில் மூன்று நாட்களுக்கு கஷ்தூரி வாடை வீசிக்கொண்டிருக்கும். அவர்களைத் தொடுகின்ற ஸஹாபாக்கள், அதைக்கொண்டே ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இப்பாதையினால் போயிருக்கிறார்களென அறிந்து கொள்வார்களென அனஸ் ரலியல்லாஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

- ஆதாரம் அல்கசாஇசுல் குப்ரா -

மேலும் சிறப்பான மக்கமா நகரமாகிறது ஆதிகாலமுள்ள கஃபதுல்லாஹ்வைக் கொண்டு பெருமை கொள்ளுமேயானால் தைபாவெனும் மதீனாவாகிறது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைக் கொண்டு பெருமையடிப்பதாக பெருமையடித்து தன்னை மதிக்கிறது. அதில் நாயகத்தின் கப்று பொதிந்திருக்க ஏன் அது தன்னை மதிக்காது. மக்கா சிறப்பானதா, மதீனா சிறப்பானதா என்ற விடயத்தில் கண்ணியமிக்க இமாம்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. மிகவும் சரியான கூற்றுப்படி மதீனாவை விட மக்கா சிறப்பானது. எனினும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கும் கபுறானது கஃபாவை விடவும் ஏற்றமானது.

ஏன் அப்படியிருக்க முடியாது? ஒரு முறை உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கஃபதுல்லாஹ்வை நோக்கி "கஃபத்துல்லாஹ்வே உன்னை வழுப்பமாக்கி வைத்த புதுமையென்ன? உன்னை சங்கையாக்கி வைத்த புதுமையென்ன? அல்லாஹ் மீது ஆணையாக உன்னைவிட அங்க சம்பூர்ண முஃமின் அல்லாஹுதஆலாவிடம் கண்ணியம் வாய்ந்தவன் எனக் கூறினார்கள். அப்படியானால் ஏன் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு இறைவனிடம் கஃபாவை விட உயரிய அந்தஸ்து இருக்க முடியாது?

இதைப்பற்றிக் கூறும் போது ஸதகத்துல்லாஹில் காஹிரி அவர்கள் இன்னும் ஒரு படி ஏறி அர்ஷை விட நாயகம் ஸல்லல்லாஹு

அலைஹிவஸல்லமுடைய கப்று மேலானது எனக் கூறுகிறார்கள்.

تُرَابٌ مَا حَوَاهُ فَاقَ عَرْشًا بِسِيرَةٍ

كَذَا عَنْ سُيُوطِيِّ إِمَامٍ مُتَمَكِّنٍ.

அதாவது:-

இன்னும் அவர்களின் திருமேனியைப் பொதிந்திருக்கும் மண்ணாகிறது அவர்களின் அந்தரங்கத்தைக்கொண்டு அல்லாஹ்வின் அர்ஷைவிட மேலாகி விட்டது. இப்படித்தான் இமாம் ஹாபிழ் அப்துர் ரஹ்மான் சுயூதி ரஹ்மதுல்லாவைத் தொட்டும் வந்துள்ளது எனக் கூறியுள்ளார்கள்.

இப்படியான அந்தஸ்தையெல்லாம் மதீனா அடைந்து கொண்டதெல்லாம் எங்களுடைய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அங்கு ஹிஜ்ரத் சென்ற காரணத்தினால் தான்.

ஒரு மனிதனுக்கு அவனது குலத்தில் மதிப்பில்லை, பிறந்த ஊரில் மதிப்பில்லை. குறிப்பாக உண்மையைச் சொல்லக்கூடியவர்களுக்கு இந்நிலைதான். இந்நிலைக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும் ஆளானார்கள். ஆரம்ப காலத்தில் நம்பிக்கையாளர் எனப் பட்டம் கொடுத்தவர்கள் அவர்களுக்கு நுபுத்துவம் கிடைத்து மக்களை புனித மிக்க தீனுல் இஸ்லாத்தின் பக்கம் அழைக்க ஆரம்பித்தவுடன் அந்நிலை மாறி குறிகாரன் என்றும், சூனியக்காரனென்றும் ஊரைக்கொடுக்க வந்திருப்பவரென்றும் வசை மொழிகள் பாடி துன்புறுத்தத் தொடங்கினார்கள். எனினும் அவர்களின் சிறிய தந்தையின் அரவணைப்பிலிருந்ததாலும், கதீஜா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் உயிருடன் இருந்ததாலும் அட்டகாசங்கள் குறைவாகவே இருந்தன. அவ்விருவரினதும் மரணத்திற்குப்பின் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றியோருக்கும் குறைஷிக் காபிர்களினால் அநியாயங்கள் அதிகரிக்கத் தொடங்கின. அவைகளைப் பொறுமையோடு சகித்துக் கொண்டு இஸ்லாத்தின் பக்கம் மக்களுக்கு அழைப்புக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள்.





அக்காலத்தில் பல நாடுகளிலிருந்தும் மக்கள் புனித கஃபாவிற்கு வரும் வழக்கம் இருந்தது. இம்மக்கள் மக்காவிலும், மக்காவைச் சூழ உள்ள இடங்களான அரபா, மினா போன்ற இடங்களிலும் ஒன்று கூடுவார்கள். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்ற பழமொழிக்கிணங்க நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்விடங்களைப் பயன்படுத்தி மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பார்கள்.

ஒரு வருடம் மதீனாவிலிருந்தும் ஆறு நபர்கள் மக்காவுக்கு வந்தனர். அவர்களை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஜம்ரதுல் ஊலா இருக்கும் இடத்தில் சந்தித்து இஸ்லாத்தின் பக்கம் அவர்களுக்கு அழைப்பு கொடுக்கவே அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொணடனர். அவர்கள் ஆறு நபர்களும் ஹஸ்ரஜ் கிளையாரைச் சேர்ந்தவர்களாகும். பின்னர் அவர்களைப் பார்த்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இம்மார்க்கத்தை நான் எத்தி வைக்கின்ற வரைக்கும் நீங்கள் எனக்கு உதவியாக இருப்பீர்களா வெனக் கேட்டார்கள். அப்போது அவர்கள் நாம் மதீனாவுக்குச் சென்று இம்மார்க்கத்தின் பக்கம் மக்களை அழைப்போம் அவர்கள் ஏற்றுக் கொண்டால் உங்களை விட சிறந்தவர் இருக்கமுடியாதெனச் கூறிவிட்டு மதீனாவுக்குப் போய் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கத் தொடங்கினார்கள். மதீனாவில் இஸ்லாம் பரவுகிறது: எல்லாம் வீடுகளிலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் செய்தி பேசப்படுகிறது. அடுத்த வருடம் பன்னிரண்டு நபர்கள் மக்காவுக்கு வந்தனர். அவர்களை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மினாவில் ஜமரதுல் உஸ்தாவில் வைத்து சந்தித்தார்கள். அப்பன்னிரண்டு பேரில் சென்ற வருடம் வந்த ஆறு நபர்களும், இன்னும் ஹஸ்ரஜ் கிளையாரைச் சேர்ந்த நால்வரும், அவ்ஸ் கிளையாரைச் சேர்ந்த இருவரும் இருந்தனர். அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு மதீனா திருமபினர். பின்னர் தாங்களுக்கு குர்ஆனைப் படித்துக் கொடுக்க யாரையும் அனுப்புமாறு கேட்டு அவர்கள் நாயகத்திடம் ஆளனுப்ப அவர்களும் அவர்களுக்கு குர்ஆனைப் படித்துக்கொடுக்க முஸ்அப் இப்னு உமையிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அனுப்பி வைத்தார்கள். அடுத்த வருடம் எழுபது நபர்கள் மக்கா வந்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை மினாவில் ஜமரதுல் அகபாவில் சந்தித்து இஸ்லாத்தைப் பரப்புதற்காக உங்களுக்கு உதவியாக இருப்போம் என உடன்படிக்கை செய்தார்கள். அவ்வமயம் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு

அவ்விடம் வந்தார்கள். அப்போது அவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்திருக்கவில்லை. அவர்கள் மதீனா வாசிகளைப்பார்த்து இவ்வாறு கூறினார்கள் "முஹம்மத் அது வரை எமது பாதுகாப்பில் இருந்தார். இப்போது உங்களை அவர்கள் நாடுகிறார்கள். எனவே உங்களின் அறுதிமானம் உறுதியாக இருக்கவேண்டும். இல்லையெனில் இப்பொழுதே கூறிவிடலாம்" என்பதாகும். அவர்களும் அறுதிமானத்தை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

இப்படிப் படிப்படியாக இஸ்லாம் மதீனாவில் பரவுகிறது. இஸ்லாம் மதீனாவில் பரவுகின்ற செய்தி குறைஷிக்காபிர்களுக்கு எட்டவே குறைஷிக்காபிர்களின் அனியாயங்களும் அட்டூழியங்களும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கும், மற்றும் மு.்.மின்களுக்கும் அதிகரிக்கின்றன. இப்பொழுது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மு.்.மீன்கள் பாதுகாப்புப் பெறும் பொருட்டு அவர்களை மதீனாவுக்கு சன்னஞ்சன்னமாக அனுப்பிக்கொண்டிருந்தார்கள். இதற்கு மத்தியில் குறைஷித்தலைவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் விடயத்தில் என்ன செய்வதென முடிவுவெடுக்க அவர்களின் ஆலோசனை மண்டபமான தாருன் நத்வாவில் ஒன்று கூடுகின்றனர். நூறு நபர்களென்றும், பதினைந்து நபர்களென்றும், ஐந்து நபர்களென்று பல்வேறு அறிவிப்புக்கள் வந்திருக்கின்றன. அவர்களில் உத்பா, ஷைபா, ஆயிப்னு வாஇல், ஆபுல் புஹ்தரா, அபுஜஹில் போன்றோர் முக்கியமானவர்களாகும்.

தருணம் பார்த்து அங்கே ஷைத்தானும் நஜ்து தேச நபர் உருவில் வருகின்றான். தாறுன் நத்வாவின் வாயிலில் உட்புகுத அனுமதி கேட்பது போன்று நிற்கின்றான். இவனை அபூஜஹில் பார்த்து சொல்கின்றான் "நாம் முக்கியமான விடயமொன்று பேசி முடிவெடுக்க இங்கு ஒன்று கூடியிருக்கின்றோம் நீ போய்விடலாம்" எனச் சொன்னான். அப்போது ஷைத்தான் "நீங்கள் தாருன் நத்வாவில் ஒன்று கூடுகின்ற விடயம் கேள்விப்பட்டுத்தான் நானும் வந்துள்ளேன். சொல்லப்படும் லோசனைகளைப் பரிசோதித்து சரியான ஆலோசனையைத் தெரிவு செய்வதில் நன்கு பயிற்சியுள்ளவன். நான் நஜ்து தேசத்தைச் சேர்ந்தவன்" எனக்கூறினான். இப்படிக் கூறியதும் அவனையும் இவர்கள் ஆலோசனைக்குச் சேர்த்துக்கொண்டனர். ஆலோசனை நடைபெறுகிறது. மரணம் யாவருக்கும் உண்மை. எனவே முஹம்மதுக்கு மரணம் வருகின்றவரைக்கும் காத்திருப்போம். மரணமடைந்து விட்டால் நாம்



அண்ணலாரின் அற்புத ஹிஜ்ரத்

நிம்மதியாக இருக்கலாமெனஎன்று உத்பா சொன்னான். அப்போது ஷைத்தான் "இது சரியான ஆலோசனையல்ல. அவருக்கு மரணம் வருகின்றவரையும் விட்டு வைத்தால் இஸ்லாம் வளர்ந்துவிடும். அவர் பெரிய படையைத் திரட்டி எங்களுடன் யுத்தத்திற்கு வருவார்" எனக் கூறினான். அப்போது மற்றவர்கள் நஜ்து தேசப் பெரியார் உண்மை சொன்னார் எனக் கூறினார்கள். பின்னர் ஷைபா "முஹம்மதுக்கு சாப்பிடக்கொடுக்காமலும், தாகத்துக்கு நீர் கொடுக்காமலம் அவருக்கு மரணம் வருகின்ற வரைக்கும் ஒரு வீட்டில் அடைத்து வைப்போம்" எனக் கூறினான். இதுகேட்ட ஷைத்தான் இதுவும் சரியன்று. ஏனெனில் பனு ஹாஷிம் கிளையினர் எவ்வாறாவது அவரை வீட்டை விட்டு வெளியேற்றி விடுவர் எனச் சொன்னான். ஏனையோரும் அதை ஆமோதித்து நஜ்து தேசப்பெரியார் உண்மை சொன்னார் எனக் கூறினர். அடுத்து ஆஷிப்னுவாஇல் "அவரை நாம் ஒட்டகத்தில் கட்டி ஒட்டகத்தை பள்ளமும் மேடுமாகத் துரத்தி விடுவோம் அதனால் அவருக்கு ஆபத்து ஏற்படும்" எனக் கூறினான். அதுவும் சரியன்று என்று ஷைத்தான் கூறினான். "முஹம்மது நாவண்மையுடையவர்: அவரின் பேச்சு மக்களைக் கவரும்: எனவே மக்களை தனது நாவண்மையால் தன்னின் பக்கம் இழுத்துக் கொள்வார்: பின்னர் பெரும்படையைத் திரட்டிக் கொண்டு எம்முடன் யுத்ததிற்கு வருவார்" எனக் கூறினான். மற்றவர்களும் இதைச் சரிகண்டு நஜ்து தேசபெரியார் உண்மை சொன்னாரெனச் சொன்னார்கள். இறுதியாக அபூ ஜஹில் "ஒவ்வொறு கோத்திரத்திலிருந்தும் திடகாத்திரமான வாலிபர்களைத் தெரிவு செய்து அவர்களின் கைகளில் ஆயுதங்களைக் கொடுத்து ஒரே நபர் வெட்டுவது போன்று அவருடைய கழுத்தை வெட்டிச்செல்வோம். யார் வெட்டியதென்று தெரியாமல் போய்விடும். அவரின் குடும்பத்தினர் நஷ்ட ஈடு தேடினால் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் பணம் திரட்டிக் கொடுத்து விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும்" எனக் கூறினான். இக் கருத்து ஷைத்தான் உட்பட எல்லோரினாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது பற்றி ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களிடம் வானவர்கோன் ஜிப்ரயீல் அலைஹிவஸல்லமவர்கள் வந்து "அல்லாஹ்வின் ரசூலே! குறைசிக்காபிர்கள் இப்படியான சூழ்ச்சியைச் செய்வதற்கு முடிவு எடுத்துள்ளார்கள். எனவே இன்று இரவு நீங்கள் வழமையாகத் தூங்கும் இடத்தில் நித்திரை செய்யவேண்டாம் என அல்லாஹ் அறிவிக்கச் சொன்னான்" எனச் சொன்னார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தான் உறங்கும் இடத்தில் ஹஸ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தூங்கும் படியும், தான் போர்த்தும் வேட்டியினால் போர்த்திக் கொள்ளும் படியும், அவருக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதெனவும் கூறினார்கள். அலி ரலியல்லாஹு அன்ஹு ஏற்றுக்கொண்டார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அவர்கள் இவ்விதம் செய்ததன் நோக்கம் தன்னிடத்தில் மக்கள் வைத்திருக்கும் அடைக்கலப் பொருட்களைத் திருப்பிக் கொடுப்பதற்காகவே. இந்நிலையில் காபிர்களும் அவர்களின் வீட்டைச் சுற்றி வளைத்து அவர்கள் வெளிவரும் வரை எதிர்பார்த்து நிற்கின்றனர். இதையறிந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒரு பிடி மணலைக் கையில் எடுத்து சூரா யாஸீன் ஆரம்பம் முதல் பஹும் லா யுப்ஸிருன் வரை ஓதியவர்களாக அம்மணலை எறிகிறார்கள். வீட்டைச் சுற்றி நின்ற காபிர்களின் தலைகளிலும், கண்களிலும் போய் விழுகின்றது. அவர்களுடைய பார்வை மறைகிறது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வீட்டை விட்டு வெளிஏறுகின்றார்கள். காபிர்களின் சூழ்ச்சியை அல்லாஹ் ஒரு பிடி மணலின் மூலம் முறியடிக்கின்றான். இதைக்குறித்து அல்லாஹ் பரிசுத்த குர் ஆனில்

وَإِذْ يَمْكُرُ بِكَ الَّذِينَ كَفَرُوا لِيُثْبِتُوكَ أَوْ يَقْتُلُوكَ
أَوْ يُخْرِجُوكَ وَيَمْكُرُونَ وَيَمْكُرُ اللَّهُ وَاللَّهُ خَيْرُ
الْمَاكِرِينَ.

"நபியே நிராகரித்தவர்கள் உங்களை சிறைப்பிடிப்பதற்கு அல்லது கொலை செய்வதற்கு அல்லது நாட்டைவிட்டுத் துரத்துவதற்கு சூழ்ச்சி செய்த நேரத்தை ஞாபகம் செய்து பாருங்கள். அவர்கள் சூழ்ச்சி செய்தார்கள்: அல்லாஹ் அவர்களுக்கு சூழ்ச்சி செய்து விட்டான்: அல்லாஹ் சூழ்ச்சி செய்வோர்களில் சிறந்தவனாக இருக்கின்றான்" என்பதாகக் கூறுகின்றான்.

வீட்டை முற்றுகையிட்டிருந்த காபிர்கள் விடியும் வரை இருந்தார்கள். பொழுது விடிந்து விட்டது: ஷைத்தான் வருகின்றான்: "என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். முஹம்மத் உங்களின் பார்வைக்குப் படாமல் சென்றுவிட்டார்" எனக் கூறுகின்றான். எனினும் உள்ளே படுத்திருக்கும் ஹஸ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகமாக இருக்கலாமென எண்ணியவர்கள் வாசலில் குழுமி நின்றார்கள். படுக்கையை விட்டு எழும்பி வந்த அலி ரலியல்லாஹு அன்ஹு





அவர்களைக் கண்டு ஏமாற்றமடைந்து அவர்களுக்கு எந்தக் கெடுதியும் விளைவிக்காது நாயகம் எங்கு சென்றார்களெனக் கேட்க அவர்களும் தெரியாதெனப் பதிலுரைத்தார்கள்.

இது பற்றி குறிப்பிடும் ஸதகதுல்லாஹில் காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்

وَوَافَى رِجَالٌ قَاصِدِينَهُ
بِشَرٍّ فَأُعْمُوا كُلُّهُمْ خَاسِئِينَهُ

அதாவது சில ஆண்கள் பொறாமை கொண்டவர்களாக தீங்கு செய்வதற்கு நாடி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் வீட்டை முற்றுகையிட்டார்கள். எனவே அவர்களனைவரையும் குருடாக்கப்பட்டுவிட்டது எனக் கூறுகிறார்கள்.

இவ்வாறு வெளியேறிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தனக்கு எல்லா விடயங்களிலும் மிகவும் ஆதரவாக இருந்த நண்பர் ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் இல்லத்திற்கு சென்றார்கள். அவர்கள் செல்லும் நேரம் சூரியன் நடுவானத்திலிருக்கும் நேரமாகும். இவர்களைக் கண்ட அபூபக்கர் ரலியல்லாஹு அவர்களின் மகள் அஸ்மா∴ நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்கள், நபிகளாரின் வருகையைப்பற்றி அறிவிக்க ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்திக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு நாளும் இந்நேரத்தில் வருவதில்லை: இன்று வருகிறார்களே: ஒருவேளை ஹிஜ்ரத் செல்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கலாமோ என சிந்தித்தார்கள்.

அவர்கள் அவ்வாறு சிந்திப்பதற்குக் காரணமும் உண்டு. ஏனெனில் நாயகம் ஸல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அவர்களின் வீட்டுக்கு காலையிலும், மாலையிலும் செல்வதுதான் வழக்கம். அத்துடன் ஹிஜ்ரத் பற்றி நாயகமவர்கள் அவர்களிடம் ஏற்கனவே கூறியுமிருந்தார்கள். இப்படி வந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வீட்டினுள் இருப்பவர்களை வெளியில் அனுப்பும் படி கூற, அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அவர்கள் தனது மகள் இருவரும் மட்டுமே இருப்பதாகக் கூறினார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஹிஜ்ரத்துச் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது எனக்கூறினார்கள். அப்போது அபூபக் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு நானும் உங்களுடனா எனக் கே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஆம் எனக்கூ அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அவர்கள் அழுதார்கள். அவ்வா அழுதது கவலையினால் அல்ல ஆனந்தத்தினாலாகும். அபூபக்கர் ஸித்த ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகத்தைப் பார்த்து "நான் இரண் ஒட்டகைகள் வாங்கி தீன் கொடுத்து வளர்த்து வந்திருக்கின்றே அவற்றில் ஒன்றை தாங்கள் இனாமாக எடுத்துக் கொள்ளுங்கள்" எனக்கூ நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் "இல்லை கிரயத்திற்குத்தான் எடுக்க வேண்டும்" எனக் கூறினார்கள். அவ்வாறே அதன் தொகையைப் பின்னர் கொடுத்தார்களெனவும், அல்லது அபூபக்க ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அக்கிரயத்தை பின்னர் எடுக்கவில்லை எனவும் சரித்திரம் கூறுகின்றது. மேற்கூறப்பட்ட இரு ஒட்டகங்களையு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் எப்பொழுது ஹிஜ்ர செல்லவேண்டிய நிலை ஏற்படுமென்று சொன்னார்களோ அன்று வாங் வளர்த்து வந்த ஒட்டகங்களாகும்.

இப்போது பிரயாணம் ஆரம்பமாகப் போகிறது. அபூபக்க ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், இடையன் ஆமிரைக் கூலிக்கு பிடித்து இப்னு உறைகிதையும் கூப்பிட்டு "ஆமிரே! நீர் மூன்று நாட்களுக் ஆடுகளை குகைக்குக் கொண்டு வரவேண்டும். உறைகிதே! நீர் மூன் நாட்களுக்குப் பின்னர் ஒட்டகங்களை குகைக்குக் கொண்டு வரவேண்டும் எனச் சொன்னார்கள்.

சீக்கிரமாக இருவருக்கும் உணவு தயாராக்கப்படுகிறது. இருவரு இரவு நேரத்தில் புறப்பட்டார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் க.்.பதுல்லாவை நோக்கி "இறைவன் மீது ஆணையாக நீ என்னிடத்தில் பூமியின் எல்லாப் பாகங்களை விடவு சிறந்ததாகும். உன்னைச் சேர்ந்தவர்கள் என்னை வெளிப்படுத்தாவிட்டால் நான் உன்னைவிட்டுப் பிரியேன். உன்னை என்னுடனும், என்னை உன்னுடனும் அன்பாக்கி வைத்திட்ட புதுமையென்ன?" எனக்கூறினார்கள் தௌர் குகைக்குப் போகும் போது, அபூ ஜஹ்லைக் கண்டார்கள் ஆனால் **அவன்** நாயகத்தைக் காணவில்லை. அவனது **கண்பா**ர்வையை இறைவன் மறைத்து விட்டான். நாயகம் ஸல்ல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் தொடர்ந்து அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு





அவர்களும் செல்கிறார்கள். சில சமயம் நாயகம் அவர்களின் முன்னும், பின்னும், வலமும், இடமுமாகச் சென்றார்கள். இதைக்கண்ட நாயகமவர்கள் "ஏன் இவ்வாறு நடக்கிறீர்?" எனக் கேட்க, "நாயகமே நாலா பக்கத்திலும் காபிர்கள் எங்களைத் தேடுவார்கள்" எனச் சொல்ல, நாயகமவர்கள் "நான் கொல்லப்படாமல் நீர் கொல்லப்பட வேண்டும் என நாடுகிறீரோ" எனக்கேட்க, ஆம் எனப் பதில் கூறினார்கள். இங்கு அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மு.்.மின்களிடத் தில் அவர்களது ஆத்மாவை விடவும் மேலானவர்கள் என அல்லாஹ் கூறும் திருமறை வசனத்தைப் பிரதிப்பளிக்கச் செய்கிறார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் நடந்ததால் அன்னாரின் புனித கால்களிலிருந்து இரத்தம் வடிந்ததைக் கண்ட அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அழுதார்கள். சில தூரம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் குந்தியவாறும் நடந்தார்கள். சில தூரம் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவர்களைச் சுமந்தும் சென்றார்கள்.

தௌர் குகையை அண்மியதும் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை வெளியே நிற்கும் படி கூறிவிட்டு, குகைக்குள் புகுந்து புடவைத்துண்டுகளினால் அங்குள்ள புதர்களையெல்லாம் அடைத்தார்கள். ஒரு புதரை மாத்திரம் அடைப்பதற்கு ஒன்றுமில்லையால் தனது குதிகாலைவைத்து அப்புதரை மறைத்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை உள்ளே அழைத்தார்கள். நபியவாகள் உள்ளே புகுத, குகைவாசலிலே ஒரு மரம் முளைத்தது. அதில் இரு புறாக்கள் வந்து கூடுகட்டி முட்டையும் இட்டன. குகை வாசலிலே சிலந்தி வலை பிண்ணியது. இப்போது ஹரத்தில் இருக்கும் புறாக்கள் அவ்வினத்தைச் சேர்தவையாகும் என இமாம்கள் கூறுகின்றனர். குகைக்குள் புகுந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் களைப்பினால் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மடியில் படுத்துக்கொண்டார்கள். அந்நேரம் ஒரு பாம்பு புதருக்குள்ளிருந்து வெளிவர முடியாமல் அபூபக்கர் ஸித்திக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் குதிகாலைக் கடிக்கின்றது. தனது உயிரை விடவும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை மேலாக நேசித்த அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விஷம் உடம்பில் ஏறியும் ஆடாமல் அசையாமல் நபிகளாரின் தூக்கம் கெட்டுவிடுமே என்ற அச்சத்தினால் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள். எனினும் கண்களிலிருந்து

கண்ணீர் வெளிப்பட்டு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் கன்னத்தில் விழ நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் விழித்தெழும்பி அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அவர்களிடம் விடயமறிந்து பாம்பு கொட்டிய இடத்தில் தனது புனித வாயிலிருந்து உமிழ்நீரை எடுத்து வைத்தார்கள். விசம் இறங்கிவிடுகிறது.

இதுபற்றி லித்ரிய்யாவில் لَمْ يَنْبَغِ إِلَّا قَلِيلٌ حَتَّى قَارَبَ مَوْتَهُ

شَفَيْتَ بِرِيقٍ مَا عَرَاهُ يَقُولُ

அதாவது சர்ப்பத்தினால் தீண்டப்பட்டவர் மரணிக்க அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் போது அதை தாங்கள் தங்களின் உமிழ்நீரினால் குணப்படுத்தினீர்கள் எனக் கூறியுள்ளார்கள்.

இது போன்ற இன்னும் அனேக மு.்.ஜிஸாத்துக்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் உமிழ் நீரினால் ஏற்பட்டுள்ளன என்பதை சரித்திர வரலாறுகள் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அவற்றில் சிலதை இங்கு தருகின்றேன்.

ஸல்மத் இப்னு அக்வ.்.ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் முழங்கால் கைபர் யுத்தத்தில் முறியவே, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதில் உமிழ்ந்தார்கள். உடனே குணமடைந்தது. இது போன்றே குபீப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஒரு தோள் பத்ரு யத்தத்தில் வெட்டுப்பட்டு சரியவே, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதைச் சரி செய்து அதில் உமிழ்ந்தார்கள். உடனே குணமடைந்தது. இதை ஸதக்கத்துல்லாஹில் காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்,

وَمِنْ نَفْثِهِ نَالَ الشِّفَاءَ مُكَسَّرٌ

وَمِنْ قَوْلِهِ قَوْلُ الإِلَهِ مُفَسَّرٌ

கை, கால் முறிந்தவன் அவனுடைய காயத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உமிழ்ந்ததால் சுகம் பெற்றான். இன்னும் அவர்களின் சொல்லினால் தான் அல்லாஹ்வின் கலாமாகிய திருக்குர்ஆன் விரிவுரை செய்யப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்கள்.





மற்றும் கைபரை வெற்றி கொள்வதற்காக யகூதிகளுடன் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யுத்தம் புரிந்தார்கள். அந்த யுத்தத்தில் ஸஹாபாக்களில் சிலர் ஷஹீதானார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏழு நாட்களாக ஒவ்வொருவர் கையிலும் கொடி கொடுத்து யுத்தத்திற்கு அனுப்பிக்கொண்டே இருந்தார்கள். அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அனுப்பினார்கள். உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும் அனுப்பினார்கள். அன்சாரிகளில் ஒருவரையும் அனுப்பினார்கள். எனினும் கோட்டை பிடிபடவில்லை. அதன்பின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தான் நாளைக்கு கொடியை ஒரு மனிதரிடம் கொடுப்பதாகவும், அவர் மூலம் கைபர் கோட்டையை அல்லாஹ் கைப்பற்றச்செய்வான் என்பதாகவும் கூறினார்கள். இதைக் கேட்ட ஸஹாபாக்கள் ஒவ்வொருவரும் தனக்கே கொடி கிடைக்கும் பாக்கியம் கிட்டுமென ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்விடயத்தைக் கேள்வியுற்ற அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் “அல்லாஹ்வே நீ கொடுத்ததைத் தடுப்பார் யாருமில்லை. நீ தடுத்ததைக் கொடுப்பார் யாருமில்லை” எனக் கூறிக்கொண்டார்கள். அந்நேரம் அவர்களுக்கு கடுமையான கண்ணோய் பீடித்திருந்தது. மறுநாள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து வர ஆளனுப்பினார்கள். கண்ணோய் என கூறப்பட்டது. கையைப்பிடித்து அழைத்து வருமாறு மீண்டும் ஒருவர் அனுப்பப்பட்டார். அழைத்துக்கொண்டு வந்தார். ஹஸ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து “ அல்லாஹ்வுடைய ரசூலே! என்னுடைய கால் மிதிக்கும் இடம் எனக்குத் தெரியவில்லை” எனக் கூறிக்கொண்டே தமது தலையை பெருமானாரின் மடி மீது வைக்க, தங்கள் கையில் உமிழ்ந்து அவர்களின் கண்களைத் திறந்து அதில் தடவினார்கள். அக்கணமே சுகமடைந்தனர். பின்னர் கொடியைக் கொடுத்து போர்க்களத்திற்கு அனுப்பினார்கள். கைபரும் வெற்றிகொள்ளப்பட்டது.

இதனைக் குறித்து இமாம் ஸதக்கத்துல்லாஹில் காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்,

இருளடைந்த கண்ணில் தாங்கள் உமிழ்ந்தீர்கள். அதே நேரத்தில் பார்வையுடையதாக மாறிவிட்டது. அக்கண்களையுடையவர்

பகைவர்களுடன் சண்டை செய்ய ஆயத்தமானார் எனக் கூறியுள்ளார்கள்.

இன்னும் மதீனாவில் அகழி வெட்டும் போது ஸஹாபாக்கள் பசித்திருந்தார்கள். ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு தனது மனைவியிடம் வந்து சாப்பிடுவதற்கு ஏதும் உண்டா எனக் கேட்டனர். கொஞ்சம் கோதுமையும், சிறிய ஆட்டுக்குட்டியொன்றும் உள்ளதென பதில் கிடைத்தது. ஆட்டை அறுத்து, கோதுமையையும் குளைத்து வைத்து விட்டுப் போய்விட்டார்கள். ஹஸ்ரத் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் இரு மக்களில் ஒருவர் மற்றவரைப் பார்த்து தங்களின் தந்தை ஆடு அறுத்த முறையைக் காட்டட்டுமா எனக் கூறி, கூரிய கத்தியை எடுத்து தனது தமையனின் கழுத்தை அறுத்து விட்டார். இரத்தம் பீறிட்டுப்பாய்ந்தது. இதனைக் கண்ட தாயார் சப்தமிட, பீதியடைந்து அறுத்த மகன் ஓடி இறைச்சி சமைக்கப்படும் அடுப்பில் விழுந்து மரணமானார். இந்நிலைமையிலும் கூட அப்பெண்மணி இரண்டு மையத்துக்களையும் ஒரு இடத்தில் வைத்து மூடி விட்டார். சமையல் வேலை முடிவடைந்து விட்டது. ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு பெருமானாரை அழைத்து வரச் செல்கையில், ஒரு சிலரை மாத்திரமே நாயகத்துடன் அழைத்துவருமாறும், அதிகமானோரைக் கூட்டிவந்து மானத்தைப் போக்கிவிடாதிருக்கும்படியும் கூறியனுப்பினார்கள். நாயகத்திடமும் அவ்வாறே கூற, மிக நல்லது எனக் கூறிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அகழி வெட்டுகின்றவர்களே! ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சாப்பாடு ஒழுங்கு செய்திருக்கின்றார்கள். எல்லோரும் ஓடி வாருங்கள்" என அழைத்தார்கள். அவ்வமயம் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓடோடி வந்து மனைவியிடம் இவ்விடயத்தைச் சொல்ல, "நீர் இப்படிச் செய்வீர் என்பது எனக்குத் தெரியும். உண்மைச் செய்தியை நாயகத்திடம் சொன்னீரா?" எனக் கேட்க, அவர்கள் ஆம் என்றார்கள். நாயகம் மிக அறிந்தவர் என அவ்வம்மையார் கூறி கணவனைச் சமாதானப் படுத்தினார்கள். நாயகமும், ஆயிரம் நபர்களும் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு உடைய வீட்டுக்கு வந்தார்கள். வீடு சிறியதாகவிருந்தது. அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "உமது வீட்டைப் பெரிதாக்கிக் கொள்ள விரும்புகிறீரா" எனக் கேட்டுவிட்டு "துஆ" கேட்டார்கள். பார்த்திருக்க முகடு உயர்ந்து, **சுவர்**கள் அகன்று வீடு பெரிதாகி விட்டது. இப்பொழுது குளைக்கப்பட்ட மாவையும், கறிச்சட்டியையும் பெருமானார் முன்னிலையில் கொண்டுவந்து வைக்கப்பட்டது. இரண்டிலும் அவர்கள்





மிழ்ந்து விட்டு கறிச்சட்டியை அடுப்பை விட்டும் இறக்காதிருக்கும்படியும், ரொட்டி தயாரிப்பதற்கு இன்னொருவரை சேர்த்துக்கொள்ளும்படியும் கூறினார்கள். ரொட்டி சுடப்படுகிறது. கறி கொதித்துக்கொண்டிருக்கிறது. றி அள்ளிக்கொண்டு வந்து வைக்கப்படுகிறது. ரொட்டிகளும் வைக்கப்படுகின்றன. ஸஹாபாக்கள் பத்துப் பத்து நபர்களாக வந்து சாப்பிட்டுவிட்டுச் செல்கின்றனர். எல்லோரும் வயிறு நிறைய சாப்பிட்டார்கள். ஆனால் ரொட்டியும், கறியும் ஆரம்பத்தில் இருந்ததைவிட அதிகமாகவே இருந்தது. ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு உடைய மனைவியையும் சாப்பிடச் செய்தார்கள். இறுதியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் சாப்பிட ஆயத்தமாகும் போது "ஜாபிரே! மக்களையும் கூப்பிடும்" என்று கூறினார்கள். ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்களைப்பற்றி தமது மனைவியிடம் வினவ, அவர்கள் உறங்குவதாக பதிலளித்தார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிள்ளைகள் வந்த பின்னர்தான் சாப்பிட வேண்டும் என்றனர். பிள்ளைகள் இருக்கும் இடத்தை ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு தமது மனைவியிடம் வினவ, அவ்விடத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று பார்த்தபோது பிள்ளைகளிருவரும் உயிர்பெற்று உறங்கிக்கொண்டிருந்தனர். அழைத்து வரப்பட்ட அவர்களில் ஒருவரை தமது வலது பக்கமும், மற்றவரை தமது இடது பக்கமும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உட்கார வைத்துக்கொண்டனர். எல்லோருமாகச் சேர்ந்து சாப்பிட்டனர். அதன்பின்னர் நடந்த விடயத்தை ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பெருமானாரிடம் கூறினார்.

மேலும் பரா. ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், "நாங்கள் ஆயிரத்து நானூறு பேர் ஹுதைபியாவில் இருந்தோம். அவ்விடத்தில் ஐம்பது ஆடுகளுக்குக்கூட குடிக்கப் போதியதற்ற அளவுக்கு தண்ணீர் இருந்த ஒரு கிணறு இருந்தது. தண்ணீர் இல்லாமல் நாங்கள் தடுமாறவே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு பட்டையில் சிறிதளவு தண்ணீர் கொண்டுவரச் செய்து, அக்கிணற்றின் அருகில் உட்கார்ந்து கொண்டு, அந்நீரில் உமிழ்ந்து அதனைக் கிணற்றில் ஊற்றினர். அவ்வமயம் மதுரமான தண்ணீர் பொங்கியெழுந்தது. நாங்களும் குடித்தோம். ஒட்டகைகளுக்கும் **அள்ளிக்** கொடுத்தோம்" என அறிவிக்கிறார்கள்.

இதனைப் பற்றிச் சொல்லும்பொழுது இமாம் ஸதக்கத்துல்லாஹில் காஹி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்,

قت ببيني وأنعجت تقلّد

لدى الضرّ فأن داد وذا الماء أغضب

"தண்ணீர் குறைந்த கிணற்றிலும், குளைத்த கொஞ்ச மாவிலு ஜனங்களுடைய வருத்தத்தின்போதும் தாங்கள் உமிழ்ந்தீர்கள். தண்ண மிக மதுரமாக இருக்கும் நிலையில் தண்ணீரும் மாவும் அதிகப்பட்டது எனச் சொல்கிறார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தௌ மலையின் குகையில் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களோடு மூன்று நாட்கள் இருந்தார்கள். இப்பாக்கியம் அபூபக்க ரலியல்லாஹு அவர்களுக்கு அல்லாஹ்வினால் கொடுக்கப்பட் பாக்கியங்களில் பெரும் பாக்கியமாகும். இது குறித்து அமீருள் மு மினீன் உமர் ரலியல்லாஹு அன்ஹு கூறுகையில், அபூபக்கர் ஸித்தீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடன் இருந்த ஓரிரவு, உமருக்கும் உமருடைய கூட்டத்திற்கும் கொடுக்கப்பட்ட பாக்கியங்களை விட சறந்தது எனக்கூறியுள்ளார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்க மக்காவை விட்டுப்புறப்பட்டதும் அவர்களின் தலையைக் கொண்டுவருபவருக்கு நூறு ஒட்டகங்கள் சன்மானமாக வழங்கப்படுமெ எற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இதன் நிமித்தம் பல நாயகமவர்களைத் தேடித் திரிந்தனர். தேடியவர்களில் சில குகைக்குக்கிட்ட நெருங்கி அங்கிருக்கும் புறாக்கூட்டையும், சிலந்தி வலையையும் கண்டு விட்டு திரும்பி விட்டனர். இன்னும் சிலர் புகுத நாடிய போது உமைய்யதுப்னு கலப் என்பவன் "நீங்கள் பைத்தியம் பிடித்தவர்கள்: முஹம்மது பிறப்பதற்கு எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் பின்னப்பட்ட சிலந்தி வலை இருக்கிறது: அவர் அதற்குள் புகுந்திந்தால் அவ்வலை பிய்ந்திருக்கும்: அதுமட்டுமா? அங்கு புறா கூடுகட்டி முட்டை இட்டிருக்கிறது: அவர் அதற்குள் புகுந்திருந்தால் புறாக்கள் பறந்திருக்கும்" எனக் கூறி புகுத நாடியவர்களைத் தடுத்தான். பின்னர் குகையை முன்னோக்கி சிறு நீர் கழித்தான். இதைக்கண்ட அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் நாயகத்தை நோக்கி "எங்களைக் கண்டு விடுவானோ" எனக்கூறிப் பயந்தார்கள். அப்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் "பயப்படாதீர்:





லாஹ்வின் உதவி எம்முடனிருக்கிறது எனக் கூறி ஆறுதல் த்தார்கள். பின்னர் குகை இரண்டாகப் பிளந்தது. முன்னால் கடல். கப்பல் ஆயத்தமாக இருக்கிறது. அப்போது நாயகம் "அவர்கள் ளைப் பிடிக்க இப்பக்கம் வந்தால் நாம் இக்கப்பலில் ஏறிச் புவிடலாம்" எனக் கூறினார்கள்.

இமாம் பூசரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பியாவில் இதுபற்றிக் கூறும்போது,

أخرجوه منها وآواه غار

وحمته حمامة ورقاء

وكفته بنسجها عنكبوت

ما كفته حمامة الحصداء

மக்கா காபிர்கள் அவர்களை அந்நகரத்தை விட்டும் ப்படுத்தினார்கள். அவர்களை தௌர் குகை அரவணைத்துக் ண்டது. மேலும் புறாக்கள் அவர்களைப் பாதுகாத்தன. இன்னும் தி வலைபின்னி அவர்களைப் பாதுகாத்தது எனக் கூறுகிறார்கள்.

் புர்தாவில்,

وَمَا حَوَى الْغَارُ مِنْ خَيْرٍ وَمِنْ كَرَمٍ

وَكُلُّ طَرْفٍ مِنَ الْكُفَّارِ عَنْهُ عَمِي

فَالصِّدْقُ فِي الْغَارِ وَالصِّدِّيقُ لَمْ يَرِمَا

وَهُمْ يَقُولُونَ مَا بِالْغَارِ مِنْ أَرِمِ

ظَنُّوا الْحَمَامَ وَظَنُّوا الْعَنْكَبُوتَ عَلَى

خَيْرِ الْبَرِيَّةِ لَمْ تَنْسُجْ وَلَمْ تَحُمِ

என்று கூறுகிறார்.

இதன் கருத்து:- நன்மையுடையவரையும், கொடையுடையவரையும் கு
அணைத்து மறைத்துக்கொண்டது. காபிர்களின் கண்கள் இதைக் காண
குருடாகி விட்டன. உண்மை உரைப்பவரும், உண்மைப்படுத்துபவ
கண்களுக்குத் தெரியாது குகையினுள் இருக்கின்றனர். ஆன
அவர்களோ குகையினுள் யாருமில்லை எனக் கூறுகின்றனர். மேலு
குகையினுள் அவர்கள் புகுந்திருந்தால் சிலந்தி வலை பிண்ணியிருக்க
மாட்டாது. புறாக்கள் இங்கு சுற்றிக்கொண்டிருக்கவும் மாட்டாது
எண்ணிக்கொண்டனர்.

குகையிலிருந்த நாட்களில் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லா
அன்ஹு அவர்களின் ஏற்பாட்டின்படி இடையன் ஆடுகளைக் கு
வாசலுக்குக் ஓட்டிச் சென்று அவைகளில் பாலைக் கறந்து இருவருக்
கொடுப்பான். அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்க
மகன் அப்துர் ரஹ்மான் இரவில் வந்து மக்காவின் சமாச்சாரங்கள
கூறிவிட்டு பொழுது விடியுமுன் மக்காவுக்கு திரும்பிவிடுவார். மூ
நாட்களுக்குப் பின்னர் அர்கித் என்பவர் ஒட்டகங்களை எடுத்து வந்

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்
தமது தோழர் அபூபக்கர் அவர்களுடன் குகையைவிட்டு வெளியே
சென்று கொண்டிருக்கின்றனர். வழியில் ஜஹ்பா எனும் இடத்
அடைந்தபோது ஒரு பாதை மக்கா மாநகரை நோக்கிச் செல்வ
அறிந்த பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்க
மக்கா மாநகரத்தின் சிந்தனை ஆட்கொள்கிறது. மக்கா மாநகரு
மீண்டும் எப்போது வருவோமோ என்று சிந்திக்கின்றனர். அவ்வம
அவர்களுக்கு ஆறுதல் கூறும்பொருட்டு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸல
அவர்களை அல்லாஹ் அனுப்புகிறான். ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸல
அவர்கள்,

نَّ الَّذِي فَرَضَ عَلَيْكَ الْقُرْآنَ لَرَادُّكَ
إِلَىٰ مَعَادٍ

"நாயகமே, உங்களின் பேரில் குர்ஆனை இறக்கி வை
நாயகன் மறுபடியும் உங்களை நீங்கள் பிறந்த இடமான மக்காவி
நிச்சயமாக அனுப்புவான்" என்ற வாக்கியத்தை ஓதிக்காட்டினார்கள்





எனவே தான் ஆகுமான பிரயாணங்கள் செய்வோர் மேற்கண்ட
ஆயத்தை, வீட்டை விட்டுக்கிளம்பும் போது ஓதிக்கொண்டு செல்வது
அவசியமென இமாம்கள் கூறுகின்றனர்.

பிரயாணத்தின் இடையில் படல் தென்பட்டது. அதன் நிழலில்
நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கினார்கள்.
அங்கு இடையன் ஒருவன் வந்தான். அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு
அன்ஹு அவர்கள் அவனிடம் பால் கேட்டார்கள். அவனும் பால் கரந்து
கொடுக்க, அதனை அவர்கள் குளிர வைத்து பெருமானார் ஸல்லல்லாஹு
அலைஹிவஸல்லம் அவர்கள் கண்விழித்ததும் குடிக்கக்கொடுத்தார்கள்.

பின்னர் இருவருமாகப் போகும் வழியில் உம்மு ம:.பத்
அவர்களின் கூடாரத்தை அடைந்தார்கள். அப்பெண்மணி அவ்வழியால்
செல்வோர் வருவோர்க்கு உணவு, பானம் கொடுக்கும் பழக்கமுடையவராக
இருந்தும், அக்காலம் பஞ்ச காலமாக இருந்தபடியால் ஒன்றும்
கொடுப்பதற்கு வழி இல்லாதவராக இருந்தார். அங்கு சென்ற இருவரும்
பால் அல்லது மாமிசம் கிரயத்திற்கு கிடைக்குமோ எனக் கேட்க,
அப்பெண்மணி இல்லையெனப்
பதில் சொன்னார்கள். அவ்வமயம் அக்கூடாரத்தின் பக்கத்தில் ஒரு
ஆடு நின்று கொண்டிருப்பதைக் கண்டு, அவ்வாட்டில் பால்
இருக்குமாவெனக் கேட்டனர். அதற்கு அப்பெண்மணி, அவ்வாடோ
மற்றைய ஆடுகளை விட பலஹீனமானதென்றும், மேய்ச்சல் நிலத்திற்குச்
சென்று மேய்வதற்குக் கூட காலில் சக்தியற்றதால் இங்கு நின்று
கொண்டிருக்கிறதென்றும் பதிலளித்தார்.

அப்போது பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்
அவர்கள் அதில் பால் கறப்பதற்கு அனுமதி கேட்டார்கள். அனுமதி
வழங்கப்பட்டதும் ஆட்டைப் பிடித்து பால்மடியைத் தடவினார்கள். என்ன
ஆச்சரியம், ஒரு சொட்டுப் பால் கூட இல்லாதிருந்த அந்த ஆட்டின்
மடியிலிருந்து பால் வழிந்தோடத் தொடங்கியது. ஒரு பெரிய பாத்திரத்தை
வரவழைத்து அதில் பாலைக் கறந்தார்கள். அதிகமானவர்களுக்குக்
குடிக்கப் போதியதாக இருந்தது. உம்மு ம:.பத்தும் குடித்தார்கள்.

இது பற்றி வித்ரியாவில்,

شِيَاهٌ عَنِ الرَّعْيِ ضِعَافٌ مُشَوَّلُ

دَرَّتْ لَكُمْ دَرَّ السَّحَائِبِ لَا كَثَا

"மேயும் தலத்திற்குப் போகமுடியாமலும், மடுவில் பா இல்லாமலும் இருந்த ஆடுகள் தங்களுக்கு மேகங்கள் மை பொழியுமாப்போல் பாலைச் சொரிந்தன. துள்ளி விழுமாப்போ விழவில்லை." என்று கூறப்படுகிறது.

இது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களி கையினூடாக ஏற்பட்ட மு∴ஜிஸாத்தாகும். இது போன்ற எத்தனையே மு∴ஜிஸாத்துகளை இறைவன் அன்னாரின் கைகளின் மூல வெளியாக்கியுள்ளான்.

இச்சம்பவம் நடைபெறும் பொழுது உம்மு ம∴பத்தின் கணவ வீட்டில் இருக்கவில்லை. அவர்கள் வந்து, பாலில்லாத ஆட்டில் பா இருப்பதைக் கண்டு வியப்படைந்தார். பெண்மணியவர்கள் விடயத்தை விளக்கிக் கூற, வந்து சென்ற மனிதர் குரைஷிகளில் உள்ளவரென்றும் அவரைத் தான் கண்டால் அவரைப் பின்பற்றப் போவதாகவும் கூறினா

பின்னர் உம்மு ம∴பத்தும், அவரின் கணவரும், சகோதரரு மதீனா சென்று இஸ்லாத்தில் சேர்ந்தார்களென வரலாறு கூறுகிறது.

மேற்கூறப்பட்ட ஆடு அன்று முதல் இரவு பகலாக பால் கொடுத்து அமீருல் மு∴மினீன் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் மரணித்தது என சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

அதுமட்டுமன்றி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல அவர்கள் உம்மு ம∴தனின் வீட்டுக்கருகாமையில் நின்ற வாடிய மரத்தடியில் வாய் கொப்பளித்து துப்பினார்கள். அந்த மரம் கொப்பு இலையுமாக செழிப்படைந்து பூத்துக் காய்க்கத் தொடங்கியது. அதன பழங்கள் அம்பர் வாடையும், தேனின் சுவையும் உடையதாக இருந்தன அதனைப் பசித்தவன் சாப்பிட்டால் பசி தீர்ப்பதாகவும், தாகித்தவன் சாப்பிட்டால் தாகம் தீர்ப்பதாகவும், நோயாளி சாப்பிட்டால் நோய் குணமாக்குவதாகவும், பாலில்லாத ஆடுகள், ஒட்டகைகள் அதன இலைகளைச் சாப்பிட்டால் பால் சுரக்கக்கூடியதாகவும் இருந்தது இம்மரத்திற்கு "முபாரகா" எனப்பெயர். சில வருடங்களின் பின்னர் ஒருநாள் அதன் பழங்கள் உதிர்ந்து இலைகள் வாடிப்போய் விட்டன. மறுநாள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மரணித்த





செய்தி எட்டியது என வரலாறு கூறுகிறது. ஆட்டின் செய்தியைப் போன்று மரத்தின் செய்தி பிரபல்யமடையாதிருப்பது புதுமையென ஷமஹ்ஸரி இமாம் கூறுகிறார்கள்.

அப்பால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எவ்விடம் போனார்களென்பது தெரியவில்லை. இக்கட்டத்தில்

جَزَى اللّٰهُ رَبُّ النَّاسِ خَيْرَ جَزَائِهٖ

رَفِيْقَيْنِ حَلَّا خَيْمَتَيْ أُمِّ مَعْبَدٍ

هُمَا نَزَلَا بِالْبِرِّ وَارْتَحَلَا بِهٖ

فَأَفْلَحَ مَنْ أَمْسٰى رَفِيْقَ مُحَمَّدٍ

அதாவது, உம்மு ம∴பத்துடைய கூடாரத்தில் விடுதிவிட்ட இரு நண்பர்களுக்கும் அல்லாஹ் நற்கூலியை நல்குவானாக. அவ்விருவரும் நன்றியுடனே அதில் விடுதி விட்டு நன்றியுடனே பிரயாணமானார்கள். எனவே, யார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நண்பனாக ஆகிவிட்டானோ அவன் வெற்றி பெற்றவன் என ஜின்கள் பாடின.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் தேடிக்கொண்டிருந்தவர்களுக்கு இச்செய்தி கிட்டவே, உம்மு ம∴மத் உடைய வீட்டுக்குப் போய் விசாரித்தனர். அவர்கள், பால் கறப்பவர் வந்ததாகவும், எங்கு சென்றார் என்பது தெரியாதெனவும் பதிலளித்தனர். தேடியவர்கள் திரும்பி விட்டனர். நாயகத்தைத் தேடிக்கொண்டிருந்தவர்களில் ஒருவரான "சுராக்கா" அதிவேகமாக ஓடும் தனது குதிரையை தன்னிடாட்டிக்குக் கொண்டு வரச்செய்து, வாளேந்தியவனாக குதிரையில் ஏறி வேறு திசையில் பெருமானாரைத் தேடிப்புறப்பட்டான். இடையில் நாயகம் அவர்களைக் கண்டுகொண்டான். இவன் வருவதைக் கண்ட அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "நாயகமே! சுராக்கா நம்மை நெருங்கி விட்டான்" எனக் கூற, பெருமானாரும் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள். அவ்வமயம் சுராக்கா நபிகளாரை நெருங்கி "என்னிடமிருந்து உம்மைப் பாதுகாப்பவன் யார்?" எனக்கேட்டான். அக்கணமே இறங்கிய ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

"அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் உங்களுக்குப் பூமியை வசப்படுத் தந்திருப்பதாகவும், தாங்கள் நாடியதைச் செய்யுமாறு அதற்கு கட்டளையிடும்படியும் கூறுகிறான்" என்ற இறைக் கட்டளை அறிவித்தனர். உடனே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல் அவர்கள், சுராக்காவின் குதிரையின் காலைப் பிடிக்கும்படி பூமிக் கட்டளையிடவே முழங்கால் வரை பூமி பிடித்துக் கொண்டது. சுராக் நாயகத்திடம் மன்னிப்புக்கோரி பாதுகாப்பும் கேட்டான். இரக்க சிந் படைத்த எம்பெருமானார் அவர்கள் அவ்வாறே செய்தனர். மீண் அவர்களைப் பின்தொடர்ந்து நெருங்குகிறான். பூமி பிடித்துக் கொள்கிற இவ்வாறு மீண்டும் மீண்டும் ஏழு முறை நடைபெற்றது. இறுதிய அவன் உண்மை நிலையறிந்து உறுதிபெறுகின்றான். "நீங்கள் செல்லு வழியில் மேயும் ஒட்டகைகளும், ஆடுகளும் எனக்குச் சொந்தமான நான் சொன்னதாக இடையனிடம் கூறி தாங்கள் விரும்பிய பிரகா பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினான். பெருமானார் அவர்க "உனக்கு இஸலாத்தில் ஆசையில்லையெனில் எனக்கு உமது சொத்தி ஆசையில்லை" எனக் கூறினார்கள். சுராக்கர் பெருமானாரைப் பார்த் " உங்களின் விடயம் பரவும் போது நான அங்கு வருவேன். என் தாங்கள் கவனித்துக் கொள்ளவேண்டும்" எனக் கூறி உறுதிமொ வாங்கிவிட்டு, "என்னால் தங்களுக்கு என்ன ஆக வேண்டும்?" என கேட்க, பெருமானார் அவர்கள் " ஏதும் அவசியமில்லை. தே வருவோரைத் திருப்பி அனுப்பி விடு" என்று வேண்டிக்கொண்டார்க அதனை ஏற்றுக்கொண்ட சுராக்கா திரும்பி விட்டான். வருவோரைய திருப்பியனுப்பினான். இதுபற்றி வித்ரியாவில்,

لما سرى من غار ثور برسله
فأتبعه شخص بطرق وأسله
بالطرق ساخت أرض موطئ رجله
كبير جليل مجتبى فوق رسله
فما هو بين الرسل واسطة السلك





அதாவது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ...ர்கள் தௌர் குகையிலிருந்து வெளியேறி, மதீனா நோக்கி மெதுவாக ...ந்த பொழுது ஒரு மனிதன் வேகமாக ஓடும் குதிரையோடும், ...புதத்தோடும் அவர்களைப் பின்தொடர்ந்தான். அந்தக் குதிரையின் ...ல் மிதித்த இடம் சுரி வாங்கியது. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி ...ஸல்லம் அவர்கள் மிகப் பெரியவர்களாகவும், ...ப்பமுடையவர்களாகவும், எல்லா ரசூல்மார்களை விடவும் ...ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் ...ல்மார்களெனும் வடத்துக்கு நடுநாயகமானவர்கள் என்பதை அறிந்து ...ள்ளுங்கள் எனக் கூறியுள்ளார்கள்.

பின்னர் சுராக்கா நாயகத்திடம் எடுத்த உறுதிமொழியைக் ...ப்பித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என சரித்திர் சொல்கிறது.

ஒருநாள் அபூஜஹ்ல் மக்காவில் சுராக்காவைச் சந்தித்தபோது, ...முஹம்மதைக் கண்டிருப்பீர்" எனக் கூற அதற்கவர்

أبا الحكم واللات لو كنت شاهدا
لأمري جوادي حين ساخت قوائمه
علمت ولم تشكك بأن محمدا
رسول ببرهان فمن ذا يقاومه.

அதாவது, ஞானத்தின் தந்தையே, எனது குதிரையின் கால்களை விழுங்கிய செய்தியை நீ கண்டிருப்பாயானால் நிச்சயமாக நீ ...தகம் கொள்ளாது, அந்த முஹம்மது அல்லாஹ்வின் தூதரென ...ந்திருப்பீர். அவருக்கு நிகரானவர்கள் யாரிருக்கின்றார்? எனச் ...ன்னார் என வருகிறது.

பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ...யில் ஓர் இடையனைச் சந்தித்து பால் கேட்க, பால் கொடுக்கும் ...ங்கள் தன்னிடம் இல்லையெனக் கூறினான். பாலில்லாத ஆடொன்றை ...கம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பிடித்து மடுவைத் ...ல் பால் சுரந்தது. முதல் கறந்த பாலை அபூபக்கர் சித்தீக் ...ல்லாஹு அன்ஹு அவர்களுக்கும், இரண்டாவது கறந்த பாலை

இடையனுக்கும் கொடுத்து விட்டு, மூன்றாம் முறை கறந்து தாஜ பருகினார்கள். பின்னர் இடையன் பெருமானாரிடம், அன்னார் யாரெ வினவ, அதற்கவர்கள் தான் அல்லாஹ்வின் தூதரெனப் பகர்ந்தன உடனே இடையன் "நீங்கள் நபியென சாட்சியங் கூறுகிறேன். உங்கள் மார்க்கம் உண்மையானது. நீங்கள் செய்த காரியத்தை நபியைத் த வேறு எவராலும் செய்ய முடியாது" எனக் கூறி இஸ்லாத் ஏற்றுக்கொண்டான். நபியவர்கள் அவனிடம் இஸ்லாம் எல் இடங்களிலும் பரவியபின்னர் தன்னை வந்து சந்திக்குமாறு கூறிவி நடந்தார்கள்.

வழியில் ஷாமிலிருந்து வந்துகொண்டிருந்த ஸுபைர், தல் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களையும், இன்னும் சில முஸ்லிம்களை சந்தித்துப் பேசினார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு ஆகிய இருவருக்கும் அவர் உடுதுணிகள் கொடுத்தார்கள். மதீனாவை நெருங்குகையில், நாயகத்ன பிடித்து குறைஷிகளிடம் ஒப்படைத்து நூறு ஒட்டகைகள் சன்மா பெற நாடிய புரைதாவும், இன்னும் எழுபது நபர்களும் எதிர்கொண்ட நபிகளார் புரைதாவைப் பார்த்து அவனது பெரையும், கோத்திரத்தை விசாரித்தனர். அவன் தனது பெயர் புரைதா என்றும், கோத்தி அஸ்லமியீயி என்றும் விடையளித்தான். அவ்வமயம் பெருமா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது தோழர் அபூபக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் தாம் ஈடேற்றம் பெற்றுவிட்டதா கூறினார்கள். புரைதாவும் பெருமானாரிடம், அவர்கள் யாரென வின தாம் அப்துல்லாஹ்வின் மகன்: அல்லாஹ்வின் தூதர் எனப் பதிலளித்த அக்கணமே புரைதாவும், அவனுடன் வந்த கூட்டத்தினரும் இஸ்லாத் ஏற்றுக்கொண்டனர். கொடியுடன் மதீனாவிற்குள் நுழைய வேண்டும் எ எண்ணத்தினால் தலைப்பாகையைக் கிழித்து கம்பத்த கட்டிக்கொண்டனர்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் மதீனா வரும் செய்தியறிந்த மதீனாவாசிகள் அவர்களை வரவேற் மகிழ்ச்சியில் தினமும் எதிர்பார்த்த வண்ணமிருந்தனர். தினமும் மதீனா எல்லைக்கு காலையில் வந்து காத்திருந்து பிற்பகலில் வீடு திரும் கொண்டிருந்தனர் இம்மக்கள். இவ்வாறு பல நாட்கள் நடந்தது. ஒருந ஒரு யகூதி தனது வீட்டின் மேல்மாடியில் ஏறியபோது வெள்ளா அணிந்த இரு நபர்கள் தூரத்தில் வருவதைக் கண்டு "அரபிக





தா உங்களுக்கு நன்மை வந்துவிட்டது" எனச் சப்தமிட்டான். உடனே நம்பிச்சென்ற மதீனாவாசிகள் ஐநூறு பேர் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு பெருமானாரை வரவேற்க வந்தனர். அவர்கள் வரும் திசையை நோக்கினர். மற்றவர்களும் வீட்டின் கதவுகளைத் திறந்து வைத்தபடியே வந்தனர். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனா எல்லைக்கு வெளியில் "ஹைரா" எனும் இடத்தில் பேரீத்தமர நிழலில் வீற்றிருந்தார்கள். அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தாடி நரைத்திருக்கவே, நாயகத்தை அறியாதவர்கள் அவர்தான் நாயகமென சைக்கினை செய்தனர். இதனையறிந்த அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், நாயகம் யாரென்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்குடன் நாயகத்தின் தலைக்குமேல் தம் போர்வையைப் பிடித்தார்கள். அப்போது மதீனாவாசிகள் பெருமானாரை நோக்கி "நபியே! அச்சம் தீர்ந்தவர்களாகவும், தாங்கள் யாவரினாலும் பின்பற்றப்படக்கூடியவர்களாகவும், எக்காலமும் தரிபட்டவர்களாகவும் மதீனத்திற்குள் நுழையுங்கள்" எனக் கூறினர்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எழுந்து "குபா" எனும் இடம் வந்து, திங்கள் முதல் வியாழன் வரை நான்கு நாட்கள் அங்கு தங்கியிருந்து ஒரு பள்ளியையும் கட்டினார்கள். அங்கு அலி ரலியல்லாஹு அன்ஹு நாயகத்தை சந்தித்தார்கள். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெள்ளிக்கிழமை "குபா"வை விட்டும் புறப்பட்டு வந்துகொண்டிருக்கையில் ஜும்ஆவுடைய நேரம் வந்துவிட்டபடியால் பனீ ஸாலிமிப்னு அவ்ப் கிளையார்கள் இருக்கும் இடத்தில் தம்முடன் வந்தவர்களுடன் ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றினார்கள். பின்னர் பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள். அன்சாரிகளது வீட்டுக்கருகாமையால் செல்லும் போது அவர்கள் ஒவ்வொருவரும் தமது வீட்டுக்கு வரும்படி பெருமனாரை அழைத்தனர். நான் ஏறியிருக்கும் ஒட்டகம் எவ்விடத்தைத் தெரிவு செய்யுமோ அதுதான் எனது தங்குமிடம் எனப் பெருமானார் அவர்களுக்குப் பதிலளித்தனர்.

இப்போது பெருமானார் தாம் தங்குமிடத்தைத் தெரிவு செய்வதற்காக கடிவாளத்தையும் கைவிட்டுவிட்டு, ஒட்டகம் நடந்து செல்லும் திசையை நோக்கிய வண்ணமிருந்தனர். தற்போது மஸ்ஜிதுந் நபவி கட்டப்பட்டிருக்கும் இடத்தில் ஒட்டகை படுத்தது. பின்னர் எழுந்து சென்று அபூ அய்யூபினில் அன்சாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வீட்டின் முன்னால் படுத்துக்கொண்டது. அங்கிருந்து எழுந்து மீண்டும்

ஆரம்பத்தில் படுத்த இடத்துக்கு வந்து படுத்துக்கொண்டது. அபூ அய் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பனூ நஜ்ஜார் கிளையான சார்ந்தவர்கள்; பனூ நஜ்ஜார் கிளையார் அப்துல் முத்தலி இனபந்துக்களாகும் என சரித்திரம் கூறுகிறது.

மதீனாவாசிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல் அவர்களின் வருகையையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். இதுபற் கூறும்போது வித்ரியாவில்,

وليده الأكوان نوراً تنشرت

بمجيئه كل الصحاب تبشرت

بمقدمه الأنصار كانت تبشرت

بمبعثه كل النبيين بشرت

لا مرسل إلا له كان يخطب

அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல் அவர்களின் பிறப்பால் அகில உலகமும் பிரகாசத்தால் பரவிய அவர்களின் விண்ணுலக யாத்திரையினால் எல்லாக் கஷ்டங்கள் இலேசாகின. அவர்களின் வருகையினால் அன்சாரிகள் களிப்புற்ற அவர்களின் நுபுவத்துவம் எல்லா நபிமார்களும் தங்களி உம்மத்தினர்க்கு நன்மாராயம் கூறினர். எந்த நபிமாரும் தங்களுடை உம்மத்தினருக்கு நாயகத்தைப் பற்றிச் சொல்லாமலிருக்கவில்ல என்பதாகக் கூறியுள்ளார்கள்.

மதீனாவில் நாயகமவர்கள் நுழைந்த நாளன்று மதீனாவின் கோணங்களும் பிரகாசமடைந்தது எனவும், பெண் பிள்ளைகள்,

طلع البدر علينا

من ثنيات الوداع





وجب الشكر علينا

ما دعا لله داع

أيها المبعوث فينا

جئت بالأمر المطاع

தனிய்யத்துல் விதா∴. எனும் பகுதியிலிருந்து பூரணச் சந்திரன் ங்கள் பேரில் உதயமாகியுள்ளது. எனவே அல்லாஹ்வின் பக்கம் க்களை அழைப்பவன் அழைக்கும் காலமெல்லாம் அல்லாஹ்வுக்கு ம் நன்றி செலுத்துவது கடமையாகி விட்டது. எங்களுக்கு மத்தியில் னுப்பப்பட்டவர்களே! நீங்கள் வழிபடக்கூடிய கருமத்தைக் கொண்டு ந்திருக்கிறீர்கள்.

ன்ற கருத்துள்ள கவிதைகளையும் பாடினார்கள் என்பதாக அனஸ் லியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் றிச்சென்ற ஒட்டகம் அபூ அய்யூப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ட்டு வாசலில் போய் படுத்தபோது பனூ நஜ்ஜாரி பெண்கள்,

نحن جوار من بني النجار

يا حبذا محمد جار

ங்கள் பனூந்நஜ்ஜார் பெண்கள். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி ஸல்லம் அவர்கள் அண்டை வீட்டுக்காரராயிருக்க மிக நல்லவர்கள் ன பாடியதாக அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

ஆம். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பயில் இருப்பவன் நற்பாக்கியம் பெற்றவன்தான். அது அவர்கள் யிருடன் இருக்கும் போதும் சரிதான். எம்மை விட்டு மறைந்து விட்ட ாதிலும் சரிதான்.